SPIRITUAL LIGHT.

[Referring to heathen practices and notions, and containing extracts from native writings in refutation of their System.]

ஞானவிளக்கம்.

சனங்களே இவ்வூரித் கோவில்களிலே சைவ பூசாசாரியர் விகிரகங்களுக்கு அபிஷேகஞ்செய்து மாலைசாத்தித் தீபதூபக்காட்டி நைவேத்தியம்வைத்துப் பூசைபண்ணிப் பின்பு அவைகளை எடுத்து வாகனத்திலே எற்றித் திருவிழா நடத்துகிறதையுஞ் சனங்கள் விழுந்து சாஷ்டாங்கபட்டணஞ்செய்கிறதையும் அவைகளுக்குப் பின்புறத்திலே சிலர் அங்கப்பிரதட்சணம்பண்ணுகிறதையும் நான் கண்டதுமல்லாமற் பிராமணர் வேதம் ஓதுகிறதையுஞ் சனங்கள் மோதிரஞ்செய்து ஆசமனம்பண்ணுகிறதையுங் கேட்டு ஆ! இதன் சனங்கள் தங்கள் பாவந்தீருமென்று இப்படியெல்லாஞ் செய்தாலும் அது நிசமில்லையே! மூன்னிருந்தபோல அவர்களுடைய மனம் வாக்கு மூதலானவைகள் எல்லாம் தீமையாகவே இருக்கிறது. இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்களென்று ஆச்சரியத்துடனே விசா

5th Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [10,000.
1843.

ரித்தேன். அதற்கு அவர்கள் எங்கள் முன்னோர்கள் பாவநிவிர்த்திக்காக இப்படிச் செய்தார்களே. நாங்களும் அப்படிச்செய்துவருகிறோம் என்றார்கள். அப்பொழுது நான் சொன்னது,

உங்கள் முன்னோர்களிலும் அநேகர் இந்தக் காரியங்களிலே பலனில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களிற் சிவவாக்கியர்,

பண்டுநான்பறித்தெறிந்தபன்மலர்கள் எத்தனை
பாழிலேசெபித்துவிட்டமந்திரங்களெத்தனை
மிண்டனாய்த்திரிந்தபோதிறைத்தநீர்கள் எத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள்சூழவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிடமறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோவிற்றெய்வமென்றுகையெடுப்பதில்லையே,

என்றுசொன்னார்.

இதினாலும் நீங்கள் கோவில்களிற் செய்கிற செய்கையெல்லாம் வீணென்று காணலாமே. மந்திரஞ் செபிக்கிறது பாழென்றார் அல்லவோ? அப்படியே பாழானால் அதினால் என்ன பலன் வரும்?

அல்லாமலும் கள்வர், கொலைபாதகர், பொய்ச்சாட்சிக்காரர், முதலானவர்கள் தேங்காய், மாங்காய் முதலானபொருள்களை நீதியுள்ள இராசாவுக்குக் கொடுத்து மன்றாடினால் அவர் அவர்கள் குற்றத்தைப் பொறுப்பாரா? பொறுக்கமாட்டாரே. இராசாவும் இப்படிப்பட்ட பொருளுக்காகப் பொறுத்துக்கொள்ளாதிருந்தால் நமமைப் படைத்த நீதியும் பரிசுத்தமுமுள்ள தேவன் நீங்கள் செய்கிற இந்தக் காரியங்களுக்காக உங்கள் பாவத்தைப் பொறுப்பாரா?

மேலும் நீங்கள் கோவில்களில் வைத்து நை

வேத்தியம்பண்ணுகிற பொருள்களைத் தேவனிடத்திலே அல்லவோ பெற்றுக்கொண்டீர்கள். அந்தப் பொருள்களை அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கவேண்டுவதென்ன? கொடுத்தாலும் என்னபலன்? யாதொன்றும் இல்லை. ஆகையால் இதினாற் பாவந்தீராதென்று தெளிந்து அறிவீர்களாக.

அன்றியும் நீங்கள் வணங்கிவருகிற பரமசிவன், பிள்ளையார், முருகமூர்த்திமுதலானவர்களில் ஒருவரானாலும் மெய்த்தேவனாகிய கத்தா அல்லவே. தமிழ்ஞானிகளில் ஒருவர்,

அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல அப்புறங்
கருமைவெண்மைசெம்மையுங்கடந்துநின்றகாரணம்
பெரியதல்லச் சிறியதல்லப் பெண்ணுமாணுமல்லவே
துரியமுங்கடந்துநின்றதூரதூரதூரமே,

என்றுசொல்லியிருக்கிறார்.

நம்மைப் படைத்துக் காப்பாற்றி வருகிற தேவன் அரிப்பிரமாதி தேவர்களுக்கும் மேலானவர். அவர் அழிவற்ற நித்திய அரூபியாய்ப் பரிசுத்தம் நீதி முதலிய நற்குணங்களைக் கொண்டிருக்கிறதுமல்லாமல், நமது மனாதிகளுக்கெட்டாதவரும் ஒன்றற்கும் ஒப்பில்லாதவருஞ் சருவ வியாபகம், சருவ வல்லபம், சருவஞானமுடைய குணாதீதராயிருக்கிறார். அவரை நேசித்து மனதினால் வணங்கவேண்டுமென்று அறிவீர்கள். அப்படி அறிந்தும் நீங்கள் பலிபூசை முதலானவைகளை அவமாய் நடத்திவருகிறதுமன்றிக் கங்கையிலே தீர்த்தமாடியுந் தவம்பண்ணியும் புண்ணியஞ்செய்தும் கோவில்

குளம் உண்டுபண்ணியும் வருகிறீர்கள். இதினால் உங்கள் பாவம் ஒருக்காலுந் தீரமாட்டாதே. அப்படியே அகப்பைச்சித்தரும்,

> காசிக்குடபோனாலும் அகப்பே
> கன்மந்தொலையாதே
> ஊத்தைபோனாலும் அகப்பே
> உள்வினைதீராதே,

என்றுசொன்னார்.

எவ்வளவு பலிகளைச் செலுத்தினாலும் எவ்வளவு பூசைகளைப்பண்ணினாலும் மனோசுத்தியடையமாட்டீர்கள். மந்திரஞ்செபிப்பதும் அங்கப்பிரதட்சணம்பண்ணுவதும் உங்களைத் தேவனுடைய திருவுள்ளத்துக்கு ஏற்கச் சுத்தமாக்கமாட்டாது. நீங்கள் இப்படிப்பட்ட செய்கைகளைச் செய்த பின்பும் முன்போலப் பொய், வஞ்சனை, பொருளாசை முதலான துற் குணங்களைக் கொண்டிருக்கிறீர்கள். ஆகையால் உங்கள் மனம் பாவத்தினால் நிறைந்திருக்கின்றதென்றும் இவ்விதமான செய்கை பாவமான குணங்களைப் போக்கவில்லையென்றுந் தெளிவாய் அறிவீர்களாக.

பாவந்தீரத்தக்க பலியை இன்னதென்று அறியாமல் நீங்கள் அதுவகையான வீண்பலிகளைச் செலுத்திவருகிறீர்கள். நாம் எல்லாரும் பாவிகள், ஆதலால் நம்முடைய பாவத்தை நாமே நிவிர்த்திபண்ண வல்லமை இல்லை. நம்மைப்படைத்த தேவன் தாமே நம்மேல் இரங்கி நம்முடைய பாவத்தைப் போக்குவதற்குத் தமதுகுமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைப் பலியாகும்படி அருளிச்செய்தார். அவரே நமக்குப் பா

வநிவிர்த்திசெய்து நம்மை மோட்சம் அடைய த்தக்கவர்களாக்கிக்கொள்பவர். அதற்காக அவர் இவ்வுலகத்திலே மனித அவதாரம்பண்ணிப் பாவமில்லாமற் பரிசுத்தராய் நடந்து சனங்களுக்கு மெய்யுபதேசஞ்செய்த பின்பு பொல்லாத மனிதர்களால் உபத்திரப்பட்டு மரணமடைந்து இவ்விதமாய்த் தம்மை நமக்காகப் பலியிட்டுப் பின்பு உயிரடைந்து பரமண்டலத்துக்கு எழுந்தருளித் தம்மை விசுவாசிக்கிற சருவருக்கும் பரிசுத்த ஆவியை இந்தருளி அவர்களைச் சுத்திகரித்துக் குணப்படுத்திப் பாவத்தை வெறுத்துவிடவும் பரிசுத்தமாய் நடக்கவும் பண்ணி மோட்சத்துக்குப் பாத்திரவாளிகளாக்கி வருகிறார்.

ஆகையால் எவர்கள் தங்கள் பாவத்தைவெறுத்துவிட்டு இயேசுக்கிறிஸ்துவைப் பற்றித் தங்களுக்கு இரட்சகராக நம்பி விசுவாசிப்பார்களோ அவர்கள்நரகத்துக்குப் போகாமல் மோட்சம் அடைந்து பேரின்பத்தை அனுபவிப்பார்கள். விசுவாசியாதவர்களோ மோட்சம் அடையாமல் நரகத்திலேதள்ளப்பட்டு வேதனைப்படுவார்கள். இவைகளெல்லாம் தேவன் அருளிச்செய்த வேதத்திலே விளக்கமாயிருக்கின்றன. அவைகளை நீங்கள் உற்றறிந்து உங்களைப் படைத்தகத்தருக்கு அருவருப்பான விக்கிரகங்களையும் வேடிக்கையான செய்கைகளையும் விட்டு அவரை அறியவும் அவரில் அன்புவைக்கவும் அவருடைய சித்தத்தின்படி நடக்கவும் எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

இயேசுக்கிறிஸ்துநாதர் தம்மைத் தாமே பலியாக்கினதினாலே வரும் புண்ணியபலன் அளவில்லாததுமாய் உங்கள் குற்றங்களை எல்லாந் தீர்க்கத் தகுதியானதுமாய் இருக்கிறதினாலே தேவன் உங்கள்மேல் இரங்கி உங்கள் பாவத்தைப் பொறுத்து உங்கள் ஆத்துமாவை இரட்சிக்கச் சித்தமாய் இருக்கிறார். அப்படி இருக்கையால் உங்கள் விருதாக் கிரியைகளையும் நெடும்பழக்கங்களையும் விட்டுத் தள்ளி உங்கள் குணம் நடத்தை முதலானதெல்லாம் பாவமுள்ளதுமாய்த் தேவ கோபத்துக்கும் நரக ஆக்கினைக்கும் உங்களை ஏதுவாக்குகிறதுமாய் இருப்பதைப் பார்த்துப் பாவ நிவிர்த்தியும் ஆத்தும ஓடேற்றமுமே அவசியமென்று விரும்பிக் குணப்பட்டு இயேசுக்கிறிஸ்துவென்னும் ஏக இரட்சகரைப் பற்றி விசுவாசித்துச் சுத்த இருதயத்தையும் மற்றுள்ள பரம நன்மைகளையும் அவரிடத்தில் அடைந்துகொள்ளும்படி முயலுங்கள்.

ஆ! இதை எல்லாம் பாராமல் இயேசுக்கிறிஸ்து எங்களுக்கு வேண்டாம் என்றுசொல்லி ஊர் வாடிக்கைப்படி இன்னமும் நடவாதேயுங்கள். அப்படி நடந்தீர்களானாற் பின்பு என்னவாய்வந்துமுடியும்! மோட்சபேரின்பத்தைப் பெறாமல் இழந்து விடுவதுமன்றித் தேவ நீதியின்படி நரகவேதனையிலே அகப்பட்டு நித்திய காலத்துக்கும் அதிலேகிடந்து சொல்லிமுடியாத துன்பங்களைப் படவும் வரும். ஐயோ! இனியாவது உங்கள் இனத்தார் சனத்தார் சொல்லும் புத்திகளைக் கேளாமல் சமயமிருக்கிற இச்சு

ணமே கிறிஸ்தநாதரிடத்தில் வந்து அவர்மூல மாய் வரும் பரம கிருபைகளைத் தேடி அடை ந்து இம்மை மறுமை இரண்டிலும் பேறுபெ ற்று நன்றாய் வாழ்ந்திருக்கப் பார்ப்பீர்களாக.

வேத வாக்கியங்கள்.

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக் கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத் த மனிதனுகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற் காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள். எப்படியெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப்பா டுபட்டு நீங்கள் தம்முடைய காலடிகளைத் தொ டர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரிகையைக் காட்டிப்போனார். அவர்பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமி ல்லை, அவர் வைபப்பட்டபொழுது, பதில்வை யாமலும் பாடுபட்டபொழுது பயமுறுத்தா மலும் நியாயமாய்த் தீர்ப்புக் கொடுக்கிறவரு க்கு அதை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்கு விலகி நீதியுள்ளவர்களாய்ப் பிழைக்கும்படிக்கு அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்க ளைத் தாங்கிக்கொண்டு அவைகளைச் சிலுவை மரத்தின்மேல் நிவிர்த்திசெய்தார். அல்லாமலும் தேவனுடைய குமாரனுகிய இயேசுக்கிறிஸ்து வின் இரத்தம் நம்முடைய பாவங்கள் எல்லாவ ற்றையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நமக் குப் பாவம் இல்லையென்றோமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாவோம். சத்தியம் ந மக்குள்ளே இராது. நம்முடைய பாவங்களை

நம் அறிக்கையிட்டாற் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயமும் நம்மை விட்டு நீங்க நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.

ஞானப்பாட்டு.

1. மரித்தாரோ? என் ஆண்டவர்?
சிலுவையிற்றானே!
மரித்தாரோ? என்ரட்சகர்.
ஆ! எனக்காகவே!

2. மரத்தில் தூங்கச்சேனை
விட்டார் என்னேசுவே!
உனக்காய்த்தான் இப்பலியை
கொடுத்தார், பாவியே.

3. நான் என்னி என்னிவருகில்
என்நேசம் எனக்கமாய்
கொழுந்துவிட்டு நெஞ்சத்தில்
எரியும்பத்தியாய்.

4. எனக்கு மீட்பு யேசுதாம்
இவ்வருள்செய்தாரே.
நான் என்ன பதில் தரலாம்
தருடொன்றில்லையே.

5. என் தேகஞ் செல்வஞ் சுகமும்
என் சீவன் செஞ்சோடே
உயிருள்ளபலியாகவும்
நாவேன் என் யேசுவே.

முற்றிற்று.